முருகப்பெருமான் துணை
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 704**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

02.09.2021, வியாழக்கிழமை

1. ஞானச்சுடராய் வந்த குருவே
ஞானபண்டிதன் என் சக்தியாகவே வாழுகின்ற
ஞானதேசிகனே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி தன்னை
நாட்டிடுவேன் பிலவ வேங்கை திங்கள் தன்னில்
தானதர்ம மகா சக்தியாக
தரணிகாக்கும் யோகசக்தியாக வந்த
3. வந்த நல் ஆறுமுக அரங்கனே
வள்ளலே வாழுகின்ற ஞானியே
சிந்தைதனில் யான் உந்தனுக்கு
சர்வபலமாக சிறப்பறிவு ஊட்டி கலந்து அற்புதம் நிகழ்த்த
4. நிகழ்த்துகின்ற அரங்கன் அனைத்து சேவைகளும்
நிலவுலகில் அரங்கன் பேரில் நடக்கின்ற அனைத்து நிகழ்வுகளும்
ஏற்புகொண்டு யானே வழிநடத்துவதாகும்
ஏழாம்படை வீடு வந்த மக்களுக்கு
5. மக்களுக்கு கலியின் துன்பங்களில்லை
மக்களுக்கு மற்றவரால் ஆபத்து இல்லை
ஆக்கமுடன் தர்மபாதுகாப்பு கூடி
அரங்கன் அறத்தின் பலத்தால் இனிதே
6. இனிதே ஞானவழி தொடருபவர் எல்லாம்
எல்லா வரமும் பெற்று
கனிவேலவன் என் தயவோடும் ஞான பலத்தோடும்
கருணை மிகுந்தவர்களாக மாறி இனிதே
7. இனிதே ஞான ஆட்சிக்காலம் அமைக்க உண்டான
இணையில்லாத சக்தியை பெருக்கி
கனிவேலவன் துணைபட இந்த கலியின்
கட்டங்கள் அனைத்தையும் விரட்டி இனிதே

8. இனிதே ஞானவான்களாக மாறி
இணையில்லாத சரவண சக்திகொண்டு இனிதே
இனிதே உலகமாற்றம் செய்வோம்
ஏழாம் படைவீட்டு அரங்கன் துணைபட இந்த அற்புதம் நிகழ்த்துவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–